ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

26.03.2024

தலைப்புச்செய்திகள்

1. தமிழகத்தில் வாக்காளர்கள் அனைவரும் தவறாது வாக்களிப்பதை முதல் கடமையாக கருத வேண்டும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு தெரிவித்துள்ளார்.

2. நாடுமுழுவதும் முதற்கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முனைப்புடன் நடைபெறுகிறது.

3. தமிழ்நாட்டில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழிதாளுடன் இன்று தொடங்கின.

4. நாட்டில் வரும் ஜுலை முதல் செப்டம்பர் வரை சராசரிக்கும் அதிகமாக மழைபொழிவு இருக்கும் என்று ஆசிய பசுபிக் பருவநிலை மையம் கணித்துள்ளது.

5. உலக கோப்பை கால்பந்து தகுதி சுற்று லீக் போட்டியில் குஹாத்தியில் இந்தியா ஆ.்.ப்கானிஸ்தானை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழூழூழூழூழூழூழூழூழூழூ

சத்யபிரதசாகு

தமிழகத்தில் வாக்காளர்கள் அனைவரும் தவறாது வாக்களிப்பதை தமது முதல் கடமையாக கருத வேண்டும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற மாவட்ட செய்தியாளர்களுக்கான பயிலரங்கில் பேசிய அவர் ஊரக பகுதிகளில் அதிகபடியான வாக்குகள் பதிவாவதாக சுட்டிக்காட்டினார்.

நகர்புறங்களில் உள்ள மக்கள் சிரமம் பாராமல் வாக்களிப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

சமூச வலைதளங்களில் பரவும் செய்திகளின் நம்பகதன்மையை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக தமிழ்நாட்டில் சி.விஜில் செயலிமூலம் ஆயிரத்து 135 புகார்கள் பெறப்பட்டு 816 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு.சத்யபிரதசாகு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக விரைவில் 165 கம்பெனி துணை ராணுவ படையினர் வர இருப்பதாக அவர் கூறினார்.

மக்களவை தேர்தலில் வாக்கு செலுத்துவது குறித்த விளக்க கையேடு இரண்டு கோடி வீடுகளுக்கு இம்மாத இறுதிக்குள் வழங்கப்பட்டுவிடும் என்றார்.

வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்குகளை செலுத்த ஏதுவாக 7 லட்சம் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தபால் வாக்குகளுக்கான 12-டி படிவங்களை விநியோகிக்கும் பணிகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதை அடுத்து வாக்குப்பதிவிற்கு முந்தைய ஏதாவது ஒருநாளில் இவர்களிடமிருந்து தபால் வாக்குகள் பெறப்படும் என்றார்.

இதனிடையே தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பாக ஆயிரத்து 403 புகார்கள் பெறப்பட்டு 128 புகார்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெறுவதாக அவர் கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

முதல்முறை வாக்காளர்கள்

மக்களவை தேர்தலில் வாக்களிக்க ஆர்வமுடன் உள்ளதாக தென்காசி, தேனி மாவட்டங்களை சேர்ந்த 18 வயது பூர்த்தியடைந்த முதல்முறை வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல் ஆணையம்

இதனிடையே தேர்தல் நடைமுறைகளை உ-எபைடை செயலி மூலம் தேர்தல் ஆணையம் கண்காணித்து வருகிறது.

தேர்தல் விதிமுறைகள் மீறப்படுவதை கண்காணித்து பதிவு செய்து அறிக்கை அளிக்க இந்த செயலி வகை செய்கிறது.

இந்த செயலி மூலம் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பான புகார்களை குடிமக்கள் உரிய வீடியோ மற்றும் புகைப்படங்கள் வாயிலாக தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குடிமக்கள் இந்த செயலிமூலம் புகார்களை தெரிவித்தால் 100 நிமிடங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு.ராஜீவ்குமார் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

வேட்புமனு

தமிழ்நாட்டில் 39 மக்களவை தொகுதிகள் உட்பட நாடுமுழுவதும் 102 மக்களவை தொகுதிகளுக்கு வரும் 19ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்பு மனு தாக்கல் நாளை நிறைவடைவதால் அரசியல் கட்சி வேட்பாளர்கள் முழுவீச்சில் வேட்பு மனு தாக்கல் செய்து வருகின்றனர்.

தூத்துக்குடியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் திருமதி கனிமொழி தமது வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.

நேற்று வரை 405 பேர் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

நாளை மாலையுடன் மனுதாக்கல் நிறைவடைவதால் திமுக, அஇஅதிமுக, பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு வேட்பாளரும் ஒன்றுக்கும் அதிகமான வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக சேலத்தில் நேற்று 19 மனுக்களும்,

நாமக்கல் தென்சென்னை தொகுதிகளில் 17 மனுக்களும் பெறப்பட்டுள்ளன.

தஞ்சையில் 4 மனுக்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வேட்பு மனுக்கள் நாளை மறுநாள் பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற வரும் சனிக்கிழமை கடைசி நாளாகும்.

அதனை தொடர்ந்து இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

வேட்புமனு பீகார்

இதனிடையே பீகார் மாநிலம் கயா, நவாடா, அவ்ரங்கபாத், ஜம்முய் மக்களவை தொகுதிகளில் வரும் 19ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய நாளை மறுநாள் கடைசிநாளாகும்.

இதுவரை அங்கு 9 பேர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கப்பல்

ஆசியான் நாடுகளுக்கான பயணத்தின் ஒருபகுதியாக இந்திய கடலோர காவல்படையின் சமுத்திர பஹேரடர் மாசு கட்டுப்பாட்டு வாகன சிறப்பு கப்பல் பிலிப்பைன்ஸ் நாட்டை சென்றடைந்துள்ளது.

மாசு கட்டுப்பாட்டு பணிகளில் இந்தியாவின் சிறப்பான பணியையும்,

ஆசியான் பகுதிகளின் மாசு கட்டுப்பாட்டு பிரச்சனைக்கு தீர்வு காண்பதை வலியுறுத்தியும் இந்த கப்பல் பல்வேறு ஆசியான் நாடுகளுக்கு பயணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த கப்பல் அடுத்த கட்டமாக வியட்நாம், ப்ரூனே நாடுகளுக்கும் பயணிக்க உள்ளது.

சென்ற ஆண்டு இந்தியாவின் கடலோர காவல்படையின் மாசு கட்டுப்பாட்டு கப்பல் கம்போடியா, மலேசியா சிங்கப்பூர், தாய்லாந்து இந்தோனேசியா நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டதன் தொடர்ச்சியாக இந்நடவடிக்கை.

ழுழுழுழுழுழுழுழுழுழு

10-ம் வகுப்பு

தமிழகத்தில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழி தாளுடன் இன்று தொடங்கின

மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்து 107 தேர்வு மையங்களில், 9 லட்சத்து 38 ஆயிரம் மாணாக்கர் தேர்வு எழுதுகின்றனர்.

முறைகேடுகளை தடுக்கும் வகையில் 3 ஆயிரத்து 350 பறக்கும் படைகளும்,

ஆயிரத்து 241 நிலையான கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 8-ம் தேதிவரை இத்தேர்வுகள் நடைபெறுகின்றன.

இன்று நடைபெற்ற தேர்வு எளிமையாக இருந்ததாக திருச்சி எடமலைப்பட்டிபுதூர் பாரதி மெட்ரிக் பள்ளியை சேர்ந்த மாணாக்கர் தெரிவிக்கின்றனர்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

நீதிமன்றம்

பம்பரம் சின்னம் பொதுப்பட்டியலில் உள்ளதா என்பது குறித்து இன்று பிற்பகலுக்குள் விளக்கம் அளிக்கும்படி தேர்தல் ஆணையத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக மதிமுக சார்பில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி கங்கபூர்வாலா தலைமையிலான அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

முன்னதாக மதிமுக-விற்கு சின்னம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக சம்மந்தப்பட்ட தொகுதியின் தேர்தல் அதிகாரிதான் முடிவெடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பிற்பகல் இரண்டேகால் மணிக்கு இதுகுறித்து விளக்கம் அளிக்க தேர்தல் ஆணையத்திற்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் பேருந்து நிலையத்தில் மக்களவை தேர்தலுக்காக கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சித்தலைவருமான திருமதி மெர்ஸி ரம்யா இன்று தொடங்கிவைத்தார்.

இம்மாவட்டத்தில் பறக்கும் படை வாகனங்களில் சூரிய ஒளியால் இயங்கும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

சிவகங்கை வாய்ஸ்

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 357 வாக்குச்சாவடிகளிலும் 90 சதவிகித அடிப்படை வசதிகள் நிறைவடைந்துள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திருப்பத்தூர் பேரூராட்சி பகுதிகளில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

பருவமழை

நாட்டில் வரும் ஜூலை முதல் செப்டம்பர் மாதம் வரையிலான பருவமழை காலத்தில் சராசரிக்கும் அதிகமாக மழைபொழிவு இருக்க கூடும் என்று ஆசிய பசுபிக் பொருளாதார பருவநிலை முன்னெச்சரிக்கை மையம் கணித்துள்ளது.

நடப்பாண்டிற்கான முதல் பருவமழை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ள இம்மையம், தொடர் நுட-ேைமெ சூழல்களால் இந்தாண்டு கோடை காலத்தில் கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

இருப்பினும் கோடை வெப்பத்தின் போது நுட-ேைமெ சூழல்கள் சமன்பாடை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2ஆவது பருவமழை காலத்தில் மழை பொழிவை ஊக்குவிக்கும் டுய-ேைமெ சூழல் நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

குண்டம் திருவிழா

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலில் குண்டம் திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெறுகிறது.

சிறப்பு பூஜைகளுடன் அதிகாலை 4 மணிக்கு தொடங்கிய இந்நிகழ்வில் லட்சக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்து நேர்த்தி கடனை செலுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

காலப்பந்து

உலக கோப்பை கால்பந்து தகுதி சுற்று லீக் போட்டியில் குஹாத்தியில் இன்று இரவு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா ஆ.ஃ.ப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழு